**சுருக்கம்**

பாசனம் – கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்கள் – பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் – திருமூர்த்தி அணையிலிருந்து பாலாறு வடிநிலம் மற்றும் தளி வாய்க்கால் குளங்கள் – நான்காம் மண்டல பாசனப் பகுதிகளுக்கு 2.9.2011 முதல் தண்ணீர் திறந்து விட அனுமதி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பொதுப்பணித் (க்யூ.1) துறை**

**அரசாணை (வாலாயம்) எண்.377** **நாள்: 31.08.2011**
**ஆவணி–14, திருவள்ளுவராண்டு 2042**

**படிக்கப்பட்டது:**

நீர்வள ஆதாரத் துறை, கோயம்புத்தூர் மண்டலத் தலைமைப் பொறியாளரின் கடித எண்.TS/உசெபொ.1/உபொ.1/1593(1)/2011, நாள் 10.8.2011.

–––––––

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், நீர்வள ஆதாரத் துறை, கோயம்புத்தூர் மண்டலத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ள சூழ்நிலைகளின் அடிப்படையில், அவரது செயற்குறிப்பினை ஏற்று கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள பரம்பிக்குளம் பிரதான கால்வாய், உடுமலைப்பேட்டை கால்வாய் மற்றும் உயர்மட்டக் கால்வாய் ஆகியவற்றில் நான்காம் மண்டல பாலாறு வடிநிலத்தின் 94,068 ஏக்கர் ஆயக்கட்டு பகுதிகளுக்கு 5688 மில்லியன் கனஅடிக்கு மிகாமலும், மற்றும் 2786 ஏக்கர் பாசனத்திற்காக தளி வாய்க்கால் பாசனக் குளங்களுக்கு 700 மில்லியன் கனஅடியும் 135 நாட்களில் தேவைக்கேற்ப இடைவெளி விட்டு மொத்தம் 57 நாட்கள், 2.9.2011 முதல் திருமூர்த்தி அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**எம். சாய் குமார்**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
தலைமைப் பொறியாளர், கோயம்புத்தூர் மண்டலம், நீர்வள ஆதாரத் துறை, கோயம்புத்தூர்–1.
மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர் / திருப்பூர் மாவட்டம்.
நகல்
முதலமைச்சரின் செயலர்–II, சென்னை – 9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
பொதுப்பணித்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, சென்னை– 5.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

**பிரிவு அலுவலர்.**